DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **Spl.S.C.No. 4 of 2023** |
| **Deposition of witness for** | **:** | **PW- 6** |
| **Name** | **:** | செல்வி |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**12.11.2025**

**முதல் விசாரணை:**

நான் கக்கன்ஜி காலனியில் குடியிருக்கிறேன், கூலி வேலை செய்கிறேன். புகார் கொடுத்த அ.சா.1 முருகன் என் கணவர் ஆகும். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1ஆம் எதிரி பாத்திமா, 2ஆம் எதிரி சாகுல்அமீது மற்றும் 3ஆம் எதிரி உமரை தெரியும். சண்டை நடந்தபோது நான் வேலைக்கு போய்விட்டேன் அதனால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி நீதிமன்றம் அதற்கு அனுமதி அளித்ததன்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் போலிசார் விசாரணையில் 10.4.2022ஆம் தேதி காலை 7.30 மணிக்கு என் கணவர் அ.சா.1 முருகன் கப்பத்தொரை பகுதியில் துப்புறவு பணியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தபோது அவருடைய தாய்மாமன் கிட்டான் விவசாயத்திற்கு உரம் வாங்க சென்றபோது 1ஆம் எதிரி பாத்திமாவின் கடை முன்பு எச்சில் துப்பியதால் 1ஆம் எதிரி கிட்டானை ஏண்டா சக்கிலிய தாயோளி கடைக்கு அருகே எச்சில் துப்புவாயா என்று கேட்டு தகராறு செய்து கிட்டானை கையால் தாக்கிவிட்டதாகவும், அதை பார்த்த என் கணவர் அ.சா.1 முருகன் ஏன் தனது மாமாவை ஜாதி பெயரை சொல்லி திட்டி அடித்தீர்கள் என்று கேட்டதற்கு 3ஆம் எதிரி உமர் மற்றும் 2ஆம் எதிரி சாகுல்அமீது என் கணவரை சக்கிலிய நாயே நீ என்ன எங்களை கேள்வி கேட்பதற்கு என்று சொல்லி அடிக்க வந்தனர் என்றும், அப்போது என் கணவர் தற்காப்பிற்காக கடைக்கு முன்பு இருந்த பிளாஸ்டிக் பைப்பை எடுத்தபோது, 3ஆம் உமர் இரும்பு பைப்பை எடுத்து வந்து என் கணவரின் இடது பக்க தலையில் அடித்ததால் என் கணவருக்கு இடது பக்க தலையில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டது என்று கேள்விபட்டதாக சொல்லிவிட்டு தற்போது நாங்களும், எதிரிகளும் சமாதானமாக

போய்விட்டதால் எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

**<u>1,2 மற்றும் 3ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

இல்லை

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.11.12 16:08:37 +0530